**சுருக்கம்**

பணியமைப்பு – பேரூராட்சிகள் நிர்வாகம் – பேரூராட்சிகள் இயக்ககம் – கணினி பயன்பாடு – தற்காலிக திட்ட ஆராய்வாளர் பணியிடத்திற்கு 01.04.2010 முதல் 31.03.2011 வரை தொடர் அனுமதி அளித்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ1)துறை**

அரசாணை (நிலை) எண். **70** நாள்: **03.05.2010**

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (நிலை) எண்: 164 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 17.11.2000.
2. அரசாணை (வா) எண்: 302 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.07.2004.
3. அரசாணை (நிலை) எண்: 150 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 01.10.2004
4. அரசாணை (வா) எண்: 37 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 04.02.2005.
5. அரசாணை (நிலை) எண் 74 ஊரக வளர்ச்சித் துறை, நாள் 26.05.2005.
6. அரசாணை (நிலை) எண்: 33 ஊரக வளர்ச்சி துறை, நாள் 30.03.2006.
7. அரசாணை (நிலை) எண்.169, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 05.02.2007.
8. அரசாணை (நிலை) எண். 97, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 26.05.2008.
9. அரசாணை (நிலை) எண். 81, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 29.05.2009.
10. பேரூராட்சிகளின் இயக்குநரின் கடித ந.க.எண். 2489/2008/இ4,நாள் 09.1.2010.

*******

**ஆணை:**

பேரூராட்சிகள் நிர்வாகத்தில் கணினி மயமாக்கும் பணியினை மேற்கொள்ளும் பொருட்டு பேரூராட்சிகள் இயக்கக அலுவலகத்தில் 1 திட்ட ஆராய்வாளர், 1 உதவி திட்ட அமைப்பாளர் மற்றும் மதுரை மற்றும் ஈரோடு மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அலுவலகங்களில் தலா 1 உதவி திட்ட அமைப்பாளர் பணியிடங்கள் ஆணை வெளியிடப்பட்ட தேதியிலிருந்து அதாவது 17.11.2000 முதல் 16.11.2001 வரை ஒரு ஆண்டு காலத்திற்கு தற்காலிகமாக தோற்றுவித்து மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் அனுமதிக்கப்பட்டுள்ளது. பின்னர் பேரூராட்சிகள் இயக்ககத்திலுள்ள ஒரு திட்ட ஆராய்வாளர் பணியிடத்திற்கு மட்டும் கடந்த 01.07.2003 முதல் 30.06.2004 வரையும் மீண்டும் மேலே இரண்டாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில் 01.07.2004 முதல் 30.09.2004 வரையும் அதனை தொடர்ந்து மேலே மூன்று முதல் எட்டு வரை படிக்கப்பட்ட அரசாணையில் தொடர் நீட்டிப்பு அனுமதியும் கடைசியாக மேலே ஒன்பதில் படிக்கப்பட்ட அரசாணையில் 01.04.2009 முதல் 31.03.2010 வரையிலும் தற்காலிக நீட்டிப்பளித்து ஆணைகள் வெளியிடப்பட்டன.

2. இந்நிலையில் மேலே 10–ல் படிக்கப்பட்ட பேரூராட்சிகள் இயக்குநரின் கடிதத்தில் தற்போது பேரூராட்சிகள் நிர்வாகத்தில் 16 மண்டல உதவி இயக்குநர் அலுவலகங்கள் மற்றும் 561 பேரூராட்சிகள் ஆகிய அனைத்திற்கும் கணினிகள் வழங்கப்பட்டு பயன்பாட்டில் உள்ளன என்றும், மேற்காணும் கணினிகள் நிறுவப்பட்டு மாவட்ட தகவல் மையத்துடன் இணைத்து மின் அஞ்சல் மூலமாக உதவி

இயக்குநர்களை தொடர்பு கொள்ளவும் மற்றும் பல்வேறு அடிப்படை வசதிகள் மற்றும் திட்டப்பணிகள் குறித்து புள்ளி விபரங்கள் தொடர்பாக பேரூராட்சிகள் இயக்கத்திற்கு உடனடி தகவல்கள் பெற்றிடவும், தக்க ஏற்பாடுகள் செய்ய உரிய நடவடிக்கை எடுக்கப்பட்டு இப்பணிகளை ஒருங்கிணைத்து செயல்படுத்தும் பொறுப்பு திட்ட ஆராய்வாளருக்கு வழங்கப்பட்டுள்ளது என்றும், எனவே விரைவான சீரான தகவல் பரிமாற்ற வசதிகள் தொடர்ந்து கடைபிடித்திடவும், அனைத்து பேரூராட்சிகளிலும் மின் ஆளுமை திட்டத்தினை செயல்படுத்திடவும் அலுவலக நடைமுறைகளை செம்மைப்படுத்தவும், அலுவலக செயல்பாடுகளின் தரத்தினை உயர்த்திடவும் எடுக்கப்பட்டு வரும் நடவடிக்கைகளின் அடிப்படையில் மேற்படி பகுதியாக திட்ட ஆராய்வாளர் பணியிடம் தொடர்வது மிகவும் அவசியமானதாக உள்ளது என்றும், மேலும், இப்பணியிடத்திற்கான செலவினம் மாநில அரசு அளிக்கும் மாநில பகிர்வு நிதியிலிருந்து (Develution of Funds) செலவழிக்கப்படுகிறது என்றும் தெரிவித்துள்ளார். மேற்கண்ட சூழ்நிலைகளில், நிர்வாக நலன் கருதி திட்ட ஆராய்வாளர் பணியிடம் தொடர வேண்டியது மிகவும் அவசியமாக உள்ளதால், ரூ.15600–39100–5400 (புதிய ஊதியம்), (பழைய ஊதியம் 8000–275–13500) என்ற ஊதிய விகிதத்தில் அப்பணியிடத்தினை 01.04.2010 முதல் நிரந்தரமாக்கி ஆணை பிறப்பிக்குமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. பேரூராட்சிகள் இயக்குநரின் செயற்குறிப்பினை அரசு கவனமுடன் பரிசீலனை செய்து, ஒன்பதாவதாக படிக்கப்பட்ட அரசாணையில் நீடிக்கப்பட்ட பேரூராட்சிகள் இயக்ககத்திலுள்ள ஒரு திட்ட ஆராய்வாளர் (பழைய ஊதிய விகிதம் ரூ.8000–275–13500), (புதிய ஊதியம் ரூ.15600–39100–5400) பணியிடத்திற்கு 01.04.2010 முதல் 31.03.2011 வரை தற்காலிகமாக தொடர் நீட்டிப்பளித்து ஆணையிடுகிறது.

4. இப்பணியிடத்தை நிரந்தரமாக்குவதற்கான கருத்துருவை இப்பதவிக்கான பணிவிதிகள் வகுக்கப்பட்டபின் அனுப்புமாறு பேரூராட்சிகளின் இயக்குநர் அறிவுறுத்தப்படுகிறார்.

5. இவ்வரசாணை நிதித்துறையின் அசா.எண்.15346/ந.நி(ம)கு.வ./2010 நாள் 23.04.2010–ல் பெறப்பட்ட நிதித்துறையின் இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**நிரஞ்சன்மார்டி,**
அரசு செயலாளர்.

__பெறுநர்:__
பேரூராட்சிகளின் இயக்குநர், குறளகம், சென்னை – 108.
இயக்குநர், தமிழ்நாடு நகர்ப்புற வளர்ச்சித் திட்டம்– 2,
சென்னை – 600 017.
__நகல்:__
நிதி (ந.நி.(ம) கு.வ.) துறை, சென்னை–9.
செயலரின் தனிச்செயலர், ந.நி.(ம)கு.வ.துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (வரவு செலவு) துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அ.ந.2) துறை, சென்னை – 9.

(ஆணைப்படி அனுப்பப்படுகிறது.)

பிரிவு அலுவலர்.